செ.வெ.எண்.18 நாள்: 06.09.2017

# திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்றினை சுத்தப்படுத்தி தூய்மைப்படுத்தும் பணிகளை இரண்டாம் கட்டமாக நடத்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தாமிரபரணி ஆற்றின் சுற்றுச்சூழலை பாதுகாத்து சுத்தப்படுத்தி தூய்மைப்படுத்துவதற்கான இரண்டாம் கட்டமாக தூய்மைப்பணிகளை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் தூய்மைப்படுத்துதல் தொடர்பான வரைவுத்திட்டம் தயார் செய்யப்பட்டு ஏற்கனவே 16.07.2017 அன்று தூய்மைப்படுத்தும் பணிகள் சிறப்பாக நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து 09.09.2017 அன்று இரண்டாம் கட்டமாக நடத்துவதற்கு 25-க்கும் மேற்பட்ட கல்லூரிகளின் பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகள், முன்னணி நிறுவனங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்கள் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்துதல் தொடர்பான பணிகள் முதற்கட்டமாக முடிந்துள்ளது. தூய்மைப்படுத்துதல் தொடர்பாக தனியாக இணையதள சேவை தொடங்கப்படவுள்ளது. இந்த இணையதள சேவையினை பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் தங்களுடைய ஆலோசனைகளை தெரியப்படுத்தி தங்களை தாமிரபரணி ஆற்றினை பாதுகாக்கும் பணிகளில் ஈடுபடுத்திட வேண்டும்.

09.09.2017 அன்று இரண்டாம் கட்டமாக நடைபெறும் தூய்மைப்படுத்தும் பணிகளில் கருப்பந்துறை, குறுக்குத்துறை பகுதியில் அன்னை ஹஜிரா பெண்கள் கல்லூரி, குறுக்குத்துறை இரயில்வே பாலப் பகுதியில் செயிண்ட் ஜான்ஸ் கல்லூரி, பரணி நகர் ரயில்வே பாலம் பகுதியில் பெட் பொறியியல் கல்லூரி மற்றும் ஐஸ்டின் பொறியியல் கல்லூரி, கணேசபுரம் பேரின்பவிலாஸ் தியேட்டர் அருகில் வி.வி. பொறியியல் கல்லூரி, கணேசபுரம்–கைலாசபுரம் பகுதியில் ஸ்காட் பொறியியல் கல்லூரி, அரவிந்த் கண் மருத்துவமனை பின்புறம் அண்ணா பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சாரதா மகளிர் கல்லூரி, சிந்துப்பூந்துறை மின்சார மாயனம் பகுதியில் யூனிவெர்செல் பொறியியல் கல்லூரி, இடதுபுறம் வடக்குபுறவழிச்சாலை பகுதியில் ரோஸ்மேரி கலைக்கல்லூரி, மணிமூர்த்தீஸ்வரம் கோவில் பாலம் அருகில் CSI ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, தேசிய நெடுஞ்சாலை வெள்ளக்கோவில் பகுதியில் திருவள்ளுவர் கலைக்கல்லூரி, பாபநாசம், காமராஜர்

அரசு கலைக்கல்லூரி சுரண்டை, வெள்ளக்கோவில் பகுதியில் வண்ணார்பேட்டை FX பொறியியல் கல்லூரி, MDT இந்து கல்லூரி, எட்டுத்தொகை நகர் பகுதியில் சர்தார் பொறியியல் கல்லூரி, கைலாஷ் நகர் பகுதியில் புனித சேவியர் கல்லூரி, பின்புறம் டிப்போ பகுதியில் அருள்மிகு பன்னிருபடி அய்யன் கல்லூரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, சாராள் தக்கர் மகளிர் கல்லூரி, மாவட்ட கருவூலம்–ரயில்வே மேம்பாலம் பகுதியில் அரசினர் பொறியியல் கல்லூரி, தாமிரபரணி பொறியியல் கல்லூரி, கருப்பந்துறை ரயில்வே மேம்பாலம் பகுதியில் பிளஸ்என் பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பம் மற்றும் கலைக்கல்லூரி ஆகிய 25-க்கும் மேற்பட்ட கல்லூரிகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்திடும் பணியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தூய்மைப்படுத்தும் பணி மட்டுமல்லாது, குப்பை சேர்வதற்கான காரணங்களை கண்டறிந்து அதனை சரிசெய்யும் விதத்தில், அப்பகுதியில் உள்ள பொதுமக்களிடம் சுற்றுச்சூழல் மாசுபடுதலால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். மேலும், அப்பகுதியில் தேவைப்படும் குப்பை தொட்டிகள், கழிப்பறைகள் மற்றும் அந்தப்பகுதிகளுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை மாவட்ட ஆட்சித்தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும்.

தூய்மைப்படுத்தும் பணிகளில் 2000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இப்பணியில் கலந்து கொள்ள உள்ளார்கள். 09.09.2017 அன்று காலை 7.30 மணிக்கு தொடங்கி காலை 10.30 மணி வரை தூய்மைப்படுத்தும்பணி நடைபெற உள்ளது. இப்பணிகளில் சிறப்பாக செயல்படவுள்ள கல்லூரிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகள், நிறுவனங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். தாமிரபரணி தூய்மை பணிகளில் அனைத்துத்துறை அலுவலர்களும், கல்லூரி மாணவ, மாணவியர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத், இ.ஆ.ப., அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சங்கரநாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.ராமசுப்பிரமணியன், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன், நகராட்சியின மண்டல இணை இயக்குநர் திரு.மாஹின் அபுபக்கர் மற்றும் கல்லூரிகளின் மாணவ, மாணவிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னணி நிறுவனங்களின் அமைப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி